பாலியர் நேசன்

BALIAR NESAN

தனிப்பிரதி ரூ.10/- ஆண்டுச் சந்தா ரூ.100/- மலர் 125 | டிசம்பர் 2017 | இதழ் 11

பூரண கிருபை!

கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்; அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. *அப்போஸ்தலர் – 4:33*

பூரண கிருபை

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். எல்லாரும் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாட ஆயத்தமாகிக் கொண்டிருப்பீர்கள். கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியை மற்றவர்களோடு பகிர்ந்து, வல்லமையுள்ள தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

இந்த மாதம் நாம் தியானிக்கும் கருத்து "பூரணகிருபை". கிறிஸ்து நமக்காக பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து, விண்ணுக்கு சென்றார். அதன் பிறகு சீடர்கள் மிகுதியான உபத்திரவத்தை அனுபவித்தார்கள். ஆனால் அவர்கள் ஆண்டவரை விட்டு விலகவேயில்லை, அவரை உறுதியாய் பற்றிக்கொண்டார்கள். பேதுரு, யோவான் போன்ற சீடர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே நோயுற்ற மனிதர்களை சொஸ்தமாக்கினார்கள், ஆனால் ஏரோது, பொந்தியுபிலாத்து போன்றவர்கள் அவர்களை அழைத்து இயேசுவின் நாமத்தை குறித்து பேசவும் போதிக்கவும் கூடாதென்றும் கட்டளையிட்டார்கள். ஆனால் மிகுதியான நெருக்கத்தின் மத்தியிலும் அவர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள். அவர்கள் எல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது.

இந்த உலகத்தில் நாம் எல்லாரும் கடவுளின் கிருபையை பெற்றுக்கொள்ள ஆசைப்படுகிறோம். அவருடைய கிருபை அவரை நேசிக்கிறவர்களுக்கு, அவருக்காக சாட்சியாக நிற்பவர்களுக்கு நிச்சயமாக உண்டு. அப்போஸ்தலர்களை ஒடுக்க ஆலோசனை கூட்டம் கூடி திட்டந்தீட்டினாலும் அவர்கள் ஆண்டவருக்காக வைராக்கியமாய் நின்றார்கள். நீயும் ஆண்டவருக்காக எவ்வளவு பிரச்சனை வந்தாலும், இந்த உலகத்தால் நீதிமன்றத்துக்கு கொண்டு போகப்பட்டாலும், வீடுகளை இழந்தாலும், ஒன்றுமில்லாமல் போனாலும் சாட்சியாய் நிற்பாயா? அப்படி நிற்கும் போது தான் பூரணகிருபையை நீ உணர்ந்து கொள்வாய், ஆண்டவருடைய பூரணகிருபை உன்னை சூழ்ந்து கொள்ளும்.

இந்த வருடத்தின் கடைசி மாதத்தில் நாம் இருக்கின்றோம். நாம் இந்த ஆண்டு எடுத்த தீர்மானத்தில் எவ்வளவு நிலைத்திருந்தோம் என்று சிந்தித்துப் பார்ப்போம். ஆண்டவருடைய கிருபை நம்மை தொடர்ந்து வழிநடத்தும். அனைவரோடும் சந்தோஷமாய் பண்டிகையை கொண்டாடு, கிறிஸ்துவின் அன்பை பகிர்ந்துகொள். Happy Christmas!

அன்பு அண்ணன்,

ஆ. பாக்யராஜ்

Tirunelveli Diocesan Childrens Mission,
16-B, North Highground Road,
CSI Bishopstowe Campus,
Palayamkottai-627 002, Tamilnadu.
Email: baliarnesan@gmail.com Phone: 8148182281
www.baliarnesan.com

பேதுரு

சீமோன் பேதுரு என்பவர்; இயேசுவின் நெருக்கமான மூன்று சீடர்களில் ஒருவர். இவர் யோனாவின் குமாரன். கேபா என்றும் அழைக்கப்படுவார். மீன்பிடிப்பதே இவரது தொழில். இவர் தனது சகோதரன் அந்திரேயாவுடன் கடலில் வலை போட்டுக் கொண்டிருக்கிறபோது இயேசு இவர்களை தன் பின்னே வரும்படி அழைத்தார். பேதுரு விசுவாசம், அன்பு மற்றும் பயந்த சுபாவமுள்ள மனிதர். துடுக்காக சிந்தித்து செயல்படுபவர்.

ஒருமுறை இயேசு கடலில் நடந்து படகிற்கு வந்தபோது, பேதுரு இயேசுவிடம், ஆண்டவரே நானும் வரவேண்டும் என்று கூறி கடலில் நடந்தார். ஆனாலும் காற்றைக் கண்டு பயந்து அமிழ்ந்து போகும்போது இயேசுவே என்று கூப்பிட்டு, தூக்கி விடப்பட்டு படகில் ஏறினார். கடவுளுடன் கடலில் நடந்த ஒரே வேதாகம மனிதர் இவர். மற்றொரு முறை பேதுருவின் மாமி கடும் ஜுரமாய் கிடந்த போது, இயேசு வந்து, அவள் கையைப் பிடித்தவுடனே, ஜுரம் அவளை விட்டு நீங்கிற்று. மற்றொரு நாள், வரிப்பணம் கட்டுவதற்காக இயேசு கூறியபடி கடலில் முதல் மீனைப் பிடித்து, அதின் வாயில் இருந்த வெள்ளிப் பணத்தை எடுத்து வரி செலுத்தினர். இதுவும் அல்லாமல், இயேசுவுடன் கூட மறுரூப மலை தரிசனத்தில் மோசே, எலியா என்பவர்களைக் கண்டார். இயேசு ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று சாட்சி பகர்ந்தார்.



இப்படியாக தன் தனிப்பட்ட வாழ்விலும், தனிப்பட்ட முறையில் அற்புதங்களை இயேசுவிடம் ருசித்தவர் பேதுரு. ஆனாலும் கடைசியில் என்ன ஆயிற்று தெரியுமா? இயேசு தான் காட்டி கொடுக்கப்படும் முன்பாக பேதுருவிடம் சேவல் கூவுகிறதற்கு முன்னே 3 தரம் நீ என்னை அறிந்திருக்கிறதை மறுதலிப்பாய் என்றார். பேதுருவோ, நான் உம்மோடே மரிக்க வேண்டியிருந்தாலும் உம்மை மறுதலிக்க மாட்டேன் என்று அன்புடன் கூறினார். சிறிது நேரத்திலேயே, இயேசுவை அறியேன் என்று மறுதலித்து, சபித்து, சத்தியம் பண்ணினார். ஆனாலும் உடனடியாக இயேசுவை நினைத்து, தன்நிலை உணர்ந்து, மனம்கசந்து அழுது, மனந்திரும்பினார். இயேசு உயிர்த்தெழுந்த பின்பு பேதுரு மறுபடியும் மீன்பிடிக்கச்சென்று விட்டார். இயேசுவோ, அங்கும் அவரை முன்போல சந்தித்து, “நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா” என்று கேட்டு, ‘என் ஆடுகளை மேய்ப்பாயாக’ என்று பொறுப்பைக் கொடுத்தார்.

இதே பேதுருதான் பிற்காலத்தில் மரித்த தொற்காள் என்னும் சீஷியை உயிரோடு எழுப்பினார். பிறவிச்சப்பாணியை நடக்கச் செய்தார், தேவதூதனால் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார், மற்றும் பல தரிசனங்களைக் கண்டார்.

இப்படியாக, தான் எந்த ஜனங்களுக்கு பயந்து இயேசுவை மறுதலித்தாரோ, அதே ஜனங்களுக்கு முன்பாக தைரியமாய் பிரசங்கித்தார். இது எப்படி நடந்தது?

பேதுரு தனது தவறுகளுக்காக முற்றிலும் மனம்திரும்பியபோது, தேவனுடைய கிருபை பூரணமாய் பெருகி, அவரது குறைகளை மன்னித்து மறைத்தது.

குட்டிப்பிள்ளைகளே, நாமும் பேதுருவைப்போல உண்மையாய் மனந்திரும்பிக், கடலைப் போன்ற பிரச்சனைகளையோ, நமக்கு எதிராக நிற்கும் திரளான மனிதர்களையோ பார்க்காமல், நாம் படும் துன்பங்களில் இயேசுவும் கூட இருப்பதை கண்டுகொண்டு, இயேசுவையே இறுகப்பற்றிக் கொள்வோமானால், நம்மையும் பூரண கிருபையால் மூடிக்கொள்வார். அப்பொழுது நாமும் கிறிஸ்துவுக்காக பேதுருவைப் போல் தைரியமாக, சாட்சியாக நிற்கமுடியும்.

“கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள், அவர்களெல்லார்மேலும் பூரணகிருபை உண்டாயிருந்தது” அப்.4:33.

Dr.Rebekah Immanuel

சாட்சிகள்

என்னுடைய அண்ணியின் மகன் பெயர் ஜெட்சன் ரேனியஸ். 6வது படிக்கிறான். ஒருவாரம் காய்ச்சல் என்று மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். இரத்த அணுக்களின் எண்ணிக்கையும் குறைந்து இருந்தது. நாங்க எல்லாரும் குடும்பமாக ஜெபம் செய்தோம். தம்பி நல்ல சுகபெலத்தோடு வீட்டிற்கு வந்தால் பாலியர் நேசன் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணினேன். இப்பொழுது தம்பி ஆரோக்கியமாக வீட்டுக்கு வர கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- D.ஜெமிலா ஐசக், ஈரோடு

என் பேத்தி ஷேரன் 12ம் வகுப்பு படிக்கிறாள், அடுத்து கிரேஸியா Engineering 4ம் ஆண்டு படிக்கிறாள், அடுத்து என் பேத்தி கியூரி Engineering 3ம் ஆண்டு படிக்கிறாள். இவர்கள் நல்ல மதிப்பெண்கள் எடுத்தால் பாலியர்நேசன் பத்திரிக்கையில் சாட்சி எழுதுவேன் என்று ஜெபித்தேன். ஷேரன் வகுப்பில் 2வது இடமும் கியூரி 2வது இடத்திலும் வெற்றி பெற கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

- C.ராஜம்மாள், கொங்கந்தான்பாறை

Myself Mrs. Jacquline Immanuel wrote a letter to you for my son's Board Exam (CBSE) which was going to be held in the month of march. You prayed & also wrote a reply for that letter. God has answered our prayer and gave my son 10/10 points and helped him to come first in School and church.

Once again I would like to thank God Almighty who has done miracle in his life. And also to you and your group who Earnestly prayed for my son.

- Jacquline, Bhandup

தினசரி தியானம்

1. வெள்ளி: துதியுங்கள் *(கலா.4:16-31)*

தேவன் நம்மைச் சந்தோஷப்பட்டு களிகூறச் சொல்கிறார். நம்மேல் எந்தவொரு பொய்யான காரியம் சொன்னாலும், கவலைப்படாமல் நாம் தேவனை ஸ்தோத்தரிக்கும் போது நம்முடைய பலன் மிகுதியாய் இருக்கும். ஆகவே இந்த மாதத்தில் எந்தப் போராட்டம் வந்தாலும் கலங்காமல் தேவனைத் துதியுங்கள். தேவன் உங்களை களிகூறப்பண்ணுவார்.

2. சனி: வழிநடத்தும் கர்த்தர் *(கலா.5:1-13)*

நான் கடந்த 11 மாதங்களும் மிகுந்த கஷ்டம் வேதனையில் சென்றேன், தேவன் இந்த மாதத்திலாவது என்னுடைய கண்ணீரைத் துடைப்பாரா! என்று நான் நினைக்கும்போது, “கர்த்தர் எந்நாளும் என் மேய்ப்பராயிருக்கிறார்” ‘நான் ஒன்றுக்கும் கவலைப்பட அவசியமில்லை. அவர் நம்மை செம்மையான வழியில் நடத்துவார்.

3. ஞாயிறு: கர்த்தர் மன்னிக்கிறார் *(கலா.5:14-26)*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நாம் எவ்வளவு பெரிய பாவம் செய்தாலும், தவறு செய்தாலும் நம்மை மன்னித்து சேர்த்துக் கொள்கிறார். ஆனால் நாம் மற்றவர் செய்யும் சிறு தவறுகளைக் கூட மன்னிப்பது இல்லை. மற்றவர் செய்யும் குற்றம், பாவம், தவறுகளை நாம் மன்னிக்கும் போது நம்முடைய பாவத்தை மன்னித்து மகிமையான கீரிடத்தைத் தருவார்.

4. திங்கள்: விழித்திருந்து ஜெபி *(கலா.6:1-18)*

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருக்கும் போது தன்னுடைய சீஷர்களிடம் நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடு விழித்திருங்கள் என்றார். ஆனால் அவர்கள் தூங்கிவிட்டார்கள், அதன் பின்பு அவர்கள் மிகுந்த உபத்திரவப்பட்டார்கள். நாமும் விழித்திருந்து ஜெபிக்கும் போது தேவன் நம்மை ஆகாரத்தினால் திருப்தியாக்குவார். தூக்கத்தை விரும்பாமல் ஜெபத்தை விரும்புவோம்.

5. செவ்வாய்: காத்திரு *(1பேது.1:1-13)*

நமக்கு ஒருவர் துரோகம் செய்து விட்டால் நாம் திரும்ப அவர்களுக்கு அதையே செய்ய நினைப்போம். ஆனால் வேதம் சொல்கிறது, தேவ பிள்ளைகள் அப்படி செய்யாமல் தேவனுக்காக காத்திருக்க வேண்டும். தேவன் இரட்சிப்பைக் கட்டளையிடுவார்.

தினசரி தியானம்

6. புதன்: உள்தோற்றம் *(1பேது.1:14-25)*

நாம் ஒருவரைப் பார்க்கும்போது வெளித் தோற்றத்தை மட்டும் பார்ப்போம். ஆனால் சங்கீதக்காரன் தாவீது சொல்கிறார் தேவன் நம் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து பார்க்கிறவராய் இருக்கிறார். நாம்வெளியில் வெண்மையாகவும் இருதயத்தில் கடுமையாகவும் இருந்தால் தேவன் அதை உற்று நோக்குகிறார்.

7. வியாழன்: ஜெயம் *(1பேது.2:1-10)*

ஒரு குதிரையை யுத்தத்துக்கு எப்படி ஆயத்தப்படுத்துகிறார்களோ, அப்படியே நாமும் நம்முடைய போராட்டமான நேரங்கள், கஷ்டமான சூழ்நிலையில் கர்த்தருடைய பாதத்தில் அமர்ந்து ஆயத்தப்படும்போது, தேவனே நமக்கு அந்த காரியத்திலிருந்து ஜெயத்தை தருவார்.

8. வெள்ளி: உதவி செய் *(1பேது.2:11-25)*



இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்த போது நன்மை செய்தவராய் சுற்றித்திரிந்தார். அதுபோல நாமும் ஏழை, எளியவர்களுக்கு நம்மால் இயன்ற உதவியை செய்யும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

9. சனி: முடிவைத் தருவார் *(1பேது.3:1-12)*

நாம் இந்த ஆண்டு துவங்கும்முன், தேவனிடம் ஏதாவது ஒரு காரியத்தில் எனக்கு நல்ல முடிவு வேண்டும் என்று ஜெபித்திருக்கலாம். 11 மாதம் முடிந்துவிட்டது. ஒரு முடிவும் வரவில்லை என்று நினைப்பீர்களானால் தேவன் நிச்சயமாகவே ஒரு நல்ல முடிவைத் தருவார். உங்கள் நம்பிக்கை வீண்போகாது.

10. ஞாயிறு: நல்வழி *(1பேது.3:13-22)*

நாம் தேவனுக்கு கீழ்படிந்து நம்முடைய பெற்றோர் சொல்லுக்கு கீழ்படிந்து நடந்து பாவமான காரியத்துக்கு விலகி ஜீவிக்கும்போது நம்மை பெற்றவர்கள் மகிழ்வார்கள். நம்மை உண்டாக்கிய தேவன் மிகுந்த மகிழ்ச்சி அடைவார்.

11. திங்கள்: ஞானம் *(1பேது.4:1-19)*

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். மூடர் ஞானத்தை அசட்டைபண்ணுவார்கள். ஆனால் தேவபிள்ளைகள் கர்த்தருக்குப் பயந்து பாவத்துக்கு விலகும்போது, ஞானம் நம்மை பெலமுள்ளவனாக மாற்றும்.

தினசரி தியானம்

12. செவ்வாய்: பயந்து நட *(1பேது.5:1-14)*

சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் தேவ பயத்துடன் நடந்தான். தேவன் அவனை ஒரு பெரிய தீர்க்கத்தரிசியாக மாற்றினார். அதைப் போல நாமும் கர்த்தருக்கு பயந்து நடக்கும் போது தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

13. புதன்: நீதியுள்ளவர்கள் *(2பேது.1:1-12)*

நம்முடைய ராஜா ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவருக்கு முன்பாக பொய் சொல்லுதல், கெட்டவார்த்தை பேசுதல், சண்டை போடுதல் போன்ற கெட்ட குணங்களை விட்டு நீதியுள்ளவர்களாக நாம் வாழும் போது அவர் நம்மை ஆசீர்வதிப்பார்.

14. வியாழன்: பலனளிப்பார் *(2பேது.1:13-21)*



நாம் நம்முடைய சத்துரு பசியாயிருக்கும்போது அவனுக்கு ஆகாரம் கொடுக்க வேண்டும் என்று வேதம் சொல்கிறது. நாம் அப்படி செய்யும் போது தேவன் நமக்குப் பலனளிப்பார். நம்முடைய நண்பர்களுக்கு மட்டும் அல்ல பகைவர்களுக்கும் உதவி செய்ய வேண்டும். தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

15. வெள்ளி: நல்ல புத்தி *(2பேது.2:1-12)*

தேவன் நமக்கு ஞானத்தை கொடுத்து இருக்கிறார். நாம் அதை நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். சோம்பேறியாக இருக்கக் கூடாது. தேவன் நமக்கு நல்ல புத்தி, ஞானம் தருவார்.

16. சனி: குறைகளை ஏற்றுக்கொள் *(2பேது.2:13-22)*

நம்முடைய பெற்றோர் அல்லது ஆசிரியர் நம்முடைய குறைகளைச் சொல்லும் போது நாம் அதை ஏற்றுக்கொண்டு திருத்திக்கொள்ள வேண்டும். தேவன் நம்மை நல்ல பிள்ளைகளாக மாற்றுவார், உயர்த்துவார்.

17. ஞாயிறு: உண்மையாய் வாழு *(2பேது.3:1-18)*

நாம் உத்தமர்களாய் இருக்கவேண்டும். எத்தனை பாடுகள், துன்பங்கள் வந்தாலும் நாம் உண்மையுள்ளவர்களாய் வாழும்போது, கர்த்தர் நம்முடைய உண்மையை அறிந்து நம்மை உயர்த்துவார், நன்மை செய்வார்.

18. திங்கள்: பொருளாசை வேண்டாம் *(1தெச.1:1-10)*

நமக்கு பொருளாசை இருக்கக்கூடாது, நாம் மற்றவர்கள் வைத்திருக்கும் Pen, Pencil etc., அதற்கு ஆசைப்படக்கூடாது. போதும் என்கிற மனதுடன் கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். தேவன் நம்மை ஆசீர்வதிப்பார்.

19. செவ்வாய்: சரிசெய் *(1தெச.2:1-20)*

நம்முடைய தவறை, பெற்றோர்கள், மற்றவர்கள் அதை சரி செய்ய சொல்லும்போது, நாம் சரிசெய்யாமல் இருப்போம் என்றால் நாம் இயேசப்பா பிள்ளையாக இருக்க மாட்டோம். அப்படிப்பட்ட கடிந்துகொள்ளுதல் நல்லது. தேவன் நமக்கு உதவி செய்வார்.

20. புதன்: வசனத்தை காத்துக்கொள் *(1தெச.3:1-13)*

நாம் தேவனுடைய வார்த்தையாகிய வசனத்தை நம்முடைய இருதயத்தில் வைத்து அதன்படி காத்து நடக்கும்போது தேவன் நம்மை பாக்கியவான்களாக மாற்றுவார்.

21. வியாழன்: தேவையை சந்திப்பார் *(1தெச.20:19-29)*

இயேசப்பா நமக்கு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் நமக்கு என்ன தேவையோ அதை தரும்படி நாம் ஜெபிக்க வேண்டும். அளவுக்கு அதிகமாகவோ அளவுக்கு குறைவாகவோ வேண்டாம். நமக்கு என்ன வேண்டுமோ அதை மட்டும் தரும்படி ஜெபிப்போம்.

22. வெள்ளி: சுறுசுறுப்பாய் இரு *(1தெச.4:1-18)*

சிறிய ஜெந்துவாயிருக்கிற எறும்பு எவ்வளவு சுறுசுறுப்பாய் இருக்கிறது. அது கோடைகாலத்திலே தன் ஆகாரத்தைச் சேமித்து வைத்து இருக்கிறது. அது போல நாமும் சுறுசுறுப்பாய் இருக்க வேண்டும். நாமும் வசனமாகிய ஆகாரத்தை சேமித்து வைத்து அதின்படி நடக்க தேவன் உதவி செய்வார்.

23. சனி: வருங்காலம் *(1தெச.5:1-14)*

எப்போது நாம் வருங்காலத்தை பற்றி மகிழ முடியும்? காலையில் எழுந்து தேவனை நோக்கி ஜெபம் செய்தபின், வசனத்தைப் படித்து அதன்படி செய்யும் போது, நம்முடைய வருங்காலத்தை பற்றி மகிழமுடியும். அதற்கு தேவன் உதவி செய்வாராக.

24. ஞாயிறு: வெளிப்படுத்தும் தேவன் *(1தெச.5:15-28)*

பவுல், இங்கே நான் பெற்ற சுவிஷேம் எந்த மனுஷனும் சொல்லவில்லை, தேவனே, அதை எனக்கு வெளிப்படுத்தினார். பள்ளிக்கூடப்பாடங்கள் உங்களுக்கு புரியவில்லை என்றால், தேவனிடம் அதற்காக ஜெபிக்கும்போது, தேவன் நமக்கு நன்றாக படிக்க உதவி செய்வார்.

25. திங்கள்: சாட்சியான வாழ்வு *(மத்.2:1-15)*

நம்முடைய வாழ்க்கையைப் பார்த்து நம்முடைய நடை, உடை, பார்வை அனைத்தையும் பார்த்து பெற்றோர் மற்றவர்கள் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.

நம்முடைய வாழ்க்கை சாட்சியாக இருக்க வேண்டும்.

26. செவ்வாய்: கிறிஸ்துவுக்குள் பிழைத்திரு *(அப்.6:1-15)*

நமக்குள்ளே கிறிஸ்து பிழைக்க வேண்டும். நம்முடைய சுபாவம் அல்ல நம்முடைய காரியம் செயல் அல்ல தேவ குணம் வெளிப்பட வேண்டும். அப்பொழுது தேவன் நமக்குள் பிழைத்திருக்கிறார்.

27. புதன்: விசுவாசம் *(யோவா.21:20-25)*

ஆபிரகாமை தேவன் அழைத்த போது, எதுவும் கேட்காமல் தேவன்பின் சென்றார். அதைப் போல தேவன் நம்மிடத்தில் சொல்வதை நாம்கேட்டு அதை அப்படியே செய்ய வேண்டும். கடுகு அளவு விசுவாசம் இருந்தால் மலையைப் பெயர்க்கமுடியும். அந்த விசுவாசத்துக்காக ஜெபிப்போம்.

28. வியாழன்: ஒருமனம் *(வெளி.14:1-5)*

நமக்குள் ஒருமனம் இருக்க வேண்டும். ஏழை, பணக்காரன் என்ற எந்த வேறுபாடும் இல்லாமல் இயேசுவின் பிள்ளைகளாய் ஒற்றுமையாக வாழ்ந்தால் நாம் ஜெயம்பெற முடியும்.

29. வெள்ளி: தேவனுடைய புத்திரர் *(2தெச.1:1-12)*

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நாம் தேவனுடைய புத்திரராயிருக்கிறோம். அதினால் நாம் அவருடைய சுதந்திரவாளியாக இருக்கிறோம். தேவனுக்கு ஸ்தோத்திரம்.

30. சனி: மேசியாவை காண்போம் *(2தெச.2:1-17)*

நம்முடைய வாழ்க்கையில் எல்லாக் காரியத்தையும் பெற்றாலும், மேசியாவை காண்பது பெரிய காரியம் அதுவே நம்முடைய வாழ்க்கையில் மேலானது அதற்காக ஜெபிப்போம்.

31. ஞாயிறு: கர்த்தர் உண்மையுள்ளவர் *(2தெச.3:1-18)*

இந்த ஆண்டின் இறுதி நாட்களுக்குள்ளாக நாம் வந்திருக்கிறோம், கர்த்தர் மேல் மட்டும் நம்பிக்கை வையுங்கள். ஆண்டவர் மட்டுமே சகலநாட்களிலும் நம்மோடு இருந்து நம்மை வழிநடத்துவார். நீங்கள் பிரயாசப்படுங்கள் கர்த்தர் உங்கள் பிரயாசத்தை வாய்க்கப்பண்ணுவார்.

கட்டங்களில் ஒளிந்திருக்கும் விடைகளை கண்டுபிடி

ஒ	பு	ம்	று	ஏ
ட்	றா	க	தி	
ட	கு	கா	ந்	மா
க	மு	தை	ல	ன்
ம்	க	ங்	சி	மீ

நாங்கள் யார்?

1. தண்ணீர் கேட்ட என் எஜமானுக்கு மாத்திரமல்ல, எங்களுக்கும் தண்ணீர் கொடுத்தாள் அந்த மகா ரூபவதி. நாங்கள் யார்?
2. எங்கள் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரண்மனைகளில் கூட இருப்போம், நாங்கள் யார்?
3. பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது. யார் அந்த பலவான்?
4. என்னைத் தேடி வந்த சவுல், ராஜாவானார். நான் யார்?
5. சோம்பேறியே! என்னிடத்தில் வந்து சுறுசுறுப்பைக் கற்றுக் கொள். நான் யார்?
6. பூமியின் தண்ணீரின் அளவை அறிய நோவாவுக்கு உதவியவன். நான் யார்?
7. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ, புது பெலன் அடைந்து, என்னைப் போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள். நான் யார்?
8. என் வயிற்றில் மூன்று நாள் அமித்தாயின் மகனை சுமந்தேன். நான் யார்?
9. கேரீத் ஆற்றண்டையில், தீர்க்கத்தரிசிக்கு அப்பமும் இறைச்சியும் கொடுத்தவன். நான் யார்?
10. நப்தலி விடுதலை பெற்ற பெண்..

- எஸ்தர், TDCM

கர்த்தரின் கிருபை

எல்லோருக்கும்... எப்போதும்...

பாடிப் பார் இந்த பாடலை

இந்த சூப்பரான பாடலை உன் அப்பா, அம்மா, அண்ணன், அக்கா, தம்பி, தங்கையோடு சேர்ந்து பாடுவாயா?

ஜென்சி

தகதிமிதன தகதிமிதன தாளம் போடுவேன்
கேளுங்க ஆஹா கேளுங்க
சாட்சியினால் பூரண கிருபை பெருகுமே
கேளுங்க...ஆஹா கேளுங்க
கிறிஸ்து மரித்து எழுந்தார் என்று சாட்சி
கூறினார் சீஷர் (2)
கிருபை பெற்றனரே பூரண கிருபை
பெற்றனரே (2)
இயேசுவுக்காக நீயும் சாட்சி சொல்லு (2)
கிருபை பெறுவாய் பூரண கிருபை
பெறுவாய் (2)
தகதிமிதன

TDCM வழங்கும் சின்ன மனசுல

JTK TV - யில்

உலகின் எப்பக்கத்திலிருந்தும்
JTK-TV நிகழ்ச்சிகளைக் காணலாம்...

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் மாலை 6 முதல் 6:30 வரை
குடும்பத்துடன் பார்த்து தேவ ஆசீர்வாதம் பெற்றிடுவீர்

பிறந்த நாள் தோத்திர காணிக்கை



சாந்தசீலன் பாக்யராஜ்	₹ 100
F.ஹேனா சென்னை	₹ 100
ஜெபா பென்னியாள் பெரம்பூர்	₹ 100
P.ஆனி டயானா, சார்கோப்	₹ 100
G.ஜெபராஜ் பொய்சர்	₹ 100
கோல்டன் பால்	₹ 100
A.ஐசக் ஆவல்பூந்துறை	₹ 100
A.ஆல்டெஸ்டன் ஐசக்	₹ 100
G.ரெனி செல்வி	₹ 100
J.பெனிட்டா நந்தினி பெரம்பூர்	₹ 100
ஆரோக்கிய செல்வி	₹ 100
எமர்சன் மும்பை	₹ 100
எமரால்டு மும்பை	₹ 100
கெவின் ஜான்பால் மும்பை	₹ 200
மங்களவள்ளி ஆசீர்வாதம்	₹ 100
J.அகஸ்டின் ஜெபராஜ்	₹ 100
ரோஸ்லின் ஜெபி	₹ 100

சாட்சிகள்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு கோடாகோடி ஸ்தோத்திரம்.

1. நான் Chicken Pox வியாதியால் கஷ்டப்பட்டேன். நான் இயேசப்பாவிடம் ஜெபம் பண்ணினேன். எனக்குப் பரிபூரண சுகம் கிடைத்தால் பாலியர்நேசனில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணினேன். அதேபோல இயேசப்பா எனக்கு பரிபூரண சுகம் கொடுத்தார்.

2. நான் நல்லபடியாக படித்து அரியர்ஸ் இல்லாமல் First Class-ல் பாஸ் பண்ணினால் பாலியர் நேசனில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை செய்து ஜெபித்தேன். கர்த்தருடைய பெரிதான கிருபையால் நான் First Class-ல் பாஸ் பண்ணிவிட்டேன். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். - D.தெபோரா, மூன்றடைப்பு

பெல் ஸ்கூல் குழந்தைகள் தின கொண்டாட்டம்

காலை மாலை வாசிக்கவேண்டிய வேதாகம பகுதிகள் – டிசம்பர்

கர்த்தாவே உமது வேதத்திலுள்ள அதிசயங்களைப் பார்க்கும்படிக்கு என் கண்களைத் திறந்தருளும். ஆமென்.

நாள்	காலை பாகம்	மனப்பாட தங்கவசனங்கள்		ஒத்துவாக்கியம்	மாலை பாகம்
1 வெள்ளி	கலா.4:16-31	நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான்;...	18	எண்.25:11	ஆமோ.4:1-6
2 சனி	கலா.5:1-13	...அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.	06	1யோவா.3:18	ஆமோ.4:7-13
3 ஞாயிறு	கலா.5:14-26	...ஆவிக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள்...	16	ரோம.8:9	ஆமோ.5:1-8
4 திங்கள்	கலா.6:1-18	நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக...	09	ஏசா.1:17	ஆமோ.5:9-17
5 செவ்வாய்	1பேது.1:1-13	...விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள்.	09	அப்.4:12	ஆமோ.5:18-27
6 புதன்	1பேது.1:14-25	கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்;...	25	சங்.119:89	ஆமோ.6:1-14
7 வியாழன்	1பேது.2:1-10	...இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.	10	2கொரி.4:1	ஆமோ.7:1-9
8 வெள்ளி	1பேது.2:11-25	...அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.	24	ஏசா.53:5	ஆமோ.7:10-17
9 சனி	1பேது.3:1-12	...சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடரக்கடவன்	11	நீதி.12:20	ஆமோ.8:1-7
10 ஞாயிறு	1பேது.3:13-22	...நன்மை செய்து பாடனுபவிப்பதே மேன்மையாயிருக்கும்.	17	1பேது.4:19	ஆமோ.8:8-14
11 திங்கள்	1பேது.4:1-19	...ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.	10	ரோம.12:13	ஆமோ.9:1-8
12 செவ்வாய்	1பேது.5:1-14	...உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.	07	பிலி.4:6	ஆமோ.9:9-15
13 புதன்	2பேது.1:1-12	...நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.	10	ரோம.11:11	யோனா.1:1-7
14 வியாழன்	2பேது.1:13-21	...உறுதியான தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு.	19	யோவா.12:38	யோனா.1:8-17

15	வெள்ளி	2பேது.2:1-12	கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களை... இரட்சிக்கவும்..அறிந்திருக்கிறார்.	09	யாக்.4:12	யோனா.2:1-10
16	சனி	2பேது.2:13-22	...உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள்...	20	எசே.36:25	யோனா.3:1-10
17	ஞாயிறு	2பேது.3:1-18	...கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள்.	15	2பேது.3:9	யோனா.4:1-11
18	திங்கள்	1தெச.1:1-10	...விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.	07	1தீமோ.4:12	ஆகா.1:1-8
19	செவ்வாய்	1தெச.2:1-20	நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்;	20	2கொரி.4:15	ஆகா.1:9-15
20	புதன்	1தெச.3:1-13	...உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.	13	சங்.10:17	ஆகா.2:1-8
21	வியாழன்	யோவா.20:19-29	...காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.	29	1பேது.1:8	ஆகா.2:9-15
22	வெள்ளி	1தெச.4:1-18	...கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்.	06	சங்.94:1	ஆகா.2:16-23
23	சனி	1தெச.5:1-14	...விழித்துக்கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.	06	1பேது.5:8	1யோவா.1:1-10
24	ஞாயிறு	1தெச.5:15-28	...நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.	21	ஏசா.55:2	1யோவா.2:1-15
25	திங்கள்	மத்.2:1-15	...மிகுந்த ஆனந்த சந்தோஷமடைந்தார்கள்.	10	அப்.8:8	1யோவா.2:16-29
26	செவ்வாய்	அப்.6:1-15	...பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான்	08	தானி.4:3	1யோவா.3:1-13
27	புதன்	யோவா.21:20-25	...நீ என்னைப் பின்பற்றி வா என்றார்.	22	மத்.16:24	1யோவா.3:14-24
28	வியாழன்	வெளி.14:1-5	இவர்களுடைய வாயிலே கபடம் காணப்படவில்லை...	05	யோபு.27:3	1யோவா.4:1-10
29	வெள்ளி	2தெச.1:1-12	பிரதிபலனாகக் கொடுப்பது தேவனுக்கு நீதியாயிருக்கிறதே.	06	ஏசா.62:11	1யோவா.4:11-21
30	சனி	2தெச.2:1-17	...நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத்துவாராக.	17	எபி.13:21	1யோவா.5:1-11
31	ஞாயிறு	2தெச.3:1-18	...நன்மை செய்வதிலே சோர்ந்து போகாமலிருங்கள்.	13	3யோவா.1:11	1யோவா.5:12-21

25.கிறிஸ்து பிறந்ததிருநாள்

திருவசன ஊழியம்

03.12.2017 • இரட்சணிய கொம்பு • லூக்கா.1:75

தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்.

10.12.2017 • வேதமே வழிகாட்டி • ஏசாயா.55:11

அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்: அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்.

17.12.2017 • இரட்சிப்பின் நம்பிக்கை • ஏசாயா.12:2

இதோ, தேவனே என் இரட்சிப்பு: நான் பயப்படாமல் நம்பிக்கையாயிருப்பேன்: கர்த்தராகிய யேகோவா என் பெலனும், என் கீதமுமானவர்: அவரே எனக்கு இரட்சிப்புமானவர்.

24.12.2017 • ஆண்டவர் நம் அருகில் • உபாகமம்.4:7

நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?.

31.12.2017 • நன்றி நிறைந்த உள்ளம் • கொலோசெயா;.3:15

தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்: நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.

வேதாகமப் பகுதி: மாற்கு

1. ஒலிவமலைக்கு அருகான ஊர் எது?
2. யாருக்கு எல்லாம் கூடும்?
3. தேவனுடைய ராஜ்யம் வரக் காத்திருந்தவன் யார்?
4. காட்டுமிருகங்களின் நடுவிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தது யார்?
5. எனக்குப் பின்சென்றுவா என இயேசு யாரை அழைத்தார்?
6. “சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்” வாசிப்பது எங்கே?
7. ஏரோதின் சகோதரன் யார்?
8. இயேசுவை கடிந்து கொண்டது யார்?
9. “எப்பத்தா” அர்த்தம் கூறு.
10. யாருக்கு இயேசு முதல் முதல் தரிசனமானார்?

விடைகளை மாற்கு நற்செய்தி நூலிருந்து தேடி கண்டுபிடித்து, கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 2018 ஜனவரி முதல் தேதிக்குள் அனுப்புங்கள்:
TDCM,16-B, North Highground Road, CSI Bishopstowe Campus, Palayamkottai - 627 002.

ஓய்வுநாளா? ஒலிம்பிக்கா?

தங்க அபியா, TDCM

சீன தேசத்தில் 1902-ம் வருடம் ஜனவரி மாதம் 16-ம் தேதி அழகிய நீல நிறக்கண்களும், செந்நிற தலைமுடியுடனும் பிறந்தவர் தான் எரிக் லிட்டில். இவரது பெற்றோர்கள் ஸ்காட்லாந்து நாட்டிலிருந்து சீனாவிற்கு சென்று ஆண்டவருடைய ஊழியத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்தார்கள் எரிக் லிட்டில் சிறுவயதிலே நன்றாக ஓடுவார். இவரை தேவனுடைய ஊழியராக அனுப்புவதே பெற்றோருடைய எண்ணமாயிருந்தது.

நாட்கள் கடந்தன. எல்லா ஊழியர்களுடைய பிள்ளைகளைப் போலவே எரிக் லிட்டிலும் தனது 6-ம் வயதில் இங்கிலாந்து நாட்டிற்கு படிக்கச் சென்றார். இவர் மிகவும் தேவபக்தி கொண்டவர். தேவனுடைய சித்தத்தை மாத்திரமே செய்பவர். போகும் முன் தன் அப்பாவிடம் “நான் தேவனுக்காக ஊழியம் செய்ய சீனாவிற்கு வருவேன்” என்றார்.

எரிக் லிட்டில் 1923-ல் Great Britain- ல் நடைபெற்ற triangular International Competition-ல் கலந்து கொண்டார். விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமானது. விளையாட்டு மைதானத்தில் எரிக் தன்னுடைய பாதையில் நின்று ஓடுவதற்காக ஜெபித்துவிட்டு ஆயத்தமானார். அரங்கம் எங்கும் ஒரே ஆரவாரம். போட்டி தொடங்கியது, எல்லா வீரர்களும் ஓடிக்கொண்டிருக்க, எரிக் தன்னால் முடிந்தவரை ஓடி முதல் சுற்றை கடந்தார் இரண்டாவது

சுற்றிலே ஓடும்போது எரிக் கீழே விழுந்து விட்டார். அங்கிருந்த ஒருவர் எரிக்-ன் பயிற்சியாளரிடம் “அவ்வளவுதான் இனிமேல் எரிக் ஜெயிக்க மாட்டான்” என்று கூறினார். இருப்பினும் கீழே விழுந்த எரிக் மீண்டும் எழும்பி தன்னை முந்திச் சென்றவர்களை விட வேகமாக தன் கண்களை வானத்தை நோக்கி பார்த்தபடியே ஓடி முதலாவதாக பந்தயக் கோட்டைத் தாண்டி பரிசைத் தட்டிச் சென்றார்.

செய்தியாளர்கள், பத்திரிக்கையாளர்கள். பார்வையாளர்கள் எல்லாரும் அவரைச் சூழ்ந்து நின்று “எரிக் ஒரு தேசவீரர், தனது தேசத்திற்கு பெருமையைச் சேர்த்திருக்கிறார்” என்று பாராட்ட ஆரம்பித்தார்கள், அப்பொழுது எரிக் கூறிய பதில் “முதல் சுற்றில் என்னால் முடிந்தவரை ஓடினேன், இரண்டாவது சுற்றில் வேகமாக ஓடியது என்னால் நம்பமுடியவில்லை” என்றார். அவருடைய கோச் வேகமாக வந்து எரிக், நீ பாரீஸ்-ல் நடக்கப்போகிற ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளபோகிறாய் என்று செய்தி வந்திருக்கிறது என்றவுடன் எரிக்கிற்கு ஆச்சரியமாக இருந்தது.

எரிக் ஞாயிற்றுக்கிழமை ஆலயத்தைத் தவிர எங்கும் செல்லமாட்டார். ஆனால் ஒலிம்பிக் போட்டியோ ஞாயிற்றுக்கிழமை என்று தெரிந்த மாத்திரத்தில் போட்டியில் கலந்துகொள்ள போவதில்லை. நான் ஆலயத்திற்குதான் செல்வேன், தேவனுடைய சித்தத்தை மாத்திரமே செய்வேன் என்னைக் கட்டாயப்படுத்தாதீர்கள் எனக் கூறினார். அந்த நாட்டு பத்திரிக்கையிலும், பேச்சுகளிலும் எரிக்-கை ஒரு தேசத்துரோகி என்றும் இவரால் நாட்டிற்கே அவமானம் என்றும் விமர்சனம் செய்தார்கள்.

இரவு படுக்கைக்கு செல்லும் போது மக்கள் தன்னை துரோகி என்று சொன்னதையும் எரிக் தன் அப்பாவிடம் “நான் சீனாவிற்கு ஊழியம் செய்வதற்கு வருவேன் என்று சொன்னதையும் நினைத்து மனங்கலங்கி, தேவனே நான் உம்மை மட்டுமே

நம்பியிருக்கிறேன், ஒலிம்பிக்கில் பங்குபெறவா? இல்லையென்றால் ஓய்வுநாளில் பங்குபெறவா? உம்முடைய விருப்பத்தை மட்டுமே நிறைவேற்றும்" என்று சொல்லிவிட்டு தூங்கச் சென்றார்.

அடுத்தநாள் காலையில் எரிக், எரிக் என ஒரு சத்தம் கேட்டது. எழும்பி பார்த்தபோது அது அவரது கோச்சின் சத்தம், "இப்பொழுது நேரம் என்ன?" என்றார் எரிக். உடனே கோச், "இது சந்தோஷப்பட வேண்டிய நேரம், ஒலிம்பிக் போட்டி நடப்பது ஞாயிற்றுக்கிழமை இல்லை. அதனால் நீ 200மீ, 400மீ என எல்லாப் போட்டிகளிலும் பங்குபெறலாம் என்று ஒலிம்பிக் கமிட்டியில் சொல்லிவிட்டார்கள்" என்றவுடன் எரிக் லிட்டில்க்கு ஒரே சந்தோஷம்.

1924-ம் ஆண்டு பாரீஸ் மற்றும் பிரான்ஸ் ஒலிம்பிக் போட்டி ஆரம்பமானது. எரிக்லிட்டில் ஓடுவதற்கு முன்பாக தன் பாக்கெட்டில் மடித்து வைத்திருந்த பேப்பரை கையில் எடுத்து விரித்து "என்னை கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்" என்ற வசனத்தை வாசித்து ஜெபித்து விட்டு தன்னுடைய பாதையில் ஓடுவதற்கு தயாரானார். அவர் பங்குபெற முடியாது என்று நினைத்த 200மீ மட்டுமல்லாமல் 200மீ, 400மீ; என அனைத்துப் போட்டிகளிலும் முதலாவதாக வந்து தன்னுடைய 21-ம் வயதிலேயே தன் நாட்டிற்கு பெருமை சேர்த்தார்.

ஒரு சிறந்த ஒலிம்பிக் வீரர் என எரிக் லிட்டில் பெயர் பெற்றார். இவைகளுக்குப் பின்பு 1925-ம் ஆண்டு எரிக் தேவனுடைய ஊழியத்தை நிறைவேற்ற சீனா திரும்பினார். அவர் மிஷனெரி ஆசிரியராக பணிபுரிந்தார். அவர் தேவனுடைய ஊழியத்திற்காக ஓடிக்கொண்டே இருந்தார். தேவையுள்ளோர்க்கு உதவிசெய்யவும், நல்ல செயல்களைச் செய்யவும், நேசிக்கத்தக்கவருமாய் வாழ்ந்து, பிப்ரவரி 21-ம் நாள் 1945-ம் வருடம் தேவனுடைய ராஜ்யத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்.

"கர்த்தர் அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால் அவருக்கு ஸ்தோத்திரம்" சங்.31:21

வித்தியாசங்களை கண்டுபிடி



புதியம்புத்தூர் பாலர் ஞாயிறு

பிம்பம்

தத்தித் தத்தி நடந்து சென்ற ஒரு குழந்தை தன் முன்னால் இருந்த பீரோவைப் பிடித்தபடி விழாமல் நின்று கொண்டிருந்தான். அவனுக்கு வயது ஒன்றிருக்கும். அப்பெரிய பீரோவின் முழுநீள கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்து அதில் முட்டியும், வியந்து பார்த்தும் மகிழ்ந்து கொண்டிருந்த அந்தக் குழந்தையை ஓடோடி வந்து எடுத்த அவன் தாய் சொன்னாள், “இப்பவே கண்ணாடியை பார்க்க கூடாது செல்லம்” என்று. சிறுகுழந்தைகள் கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்ப்பதில் நம் சமூகத்தில் சிலருக்கு உடன்பாடில்லை. ஆனால் பார்க்கக் கூடாததற்கு தெளிவான காரணமுமில்லை. சிறு குழந்தைகள் ஏன் கண்ணாடியில் தன்னைப் பார்க்க கூடாது என்று பலரிடம் கருத்துக்கேட்டேன். ஒருவர், “கண்ணாடி பார்த்தா பேச்சு வராது” என்று பயமுறுத்தினார். மற்றொருவர் “கண்ணாடியில் முதன்முதலாய் தன்பிம்பத்தைப் பார்க்கும் குழந்தை குழம்பிரும்பா, அதனால்தான் சின்னக்குழந்தைகள் விவரம் தெரியும்வரை கண்ணாடி பார்க்கக் கூடாதென்று சொல்கிறோம்” என்றார். பிறந்து நடக்கத் துடிக்கும் ஒரு குழந்தை கண்ணாடியைப் பார்ப்பதற்கு பின் இவ்வளவு காரணங்களா?

ஒரு வேளை உண்மையாக கூட இருக்கலாம். நான் சிறுவனாயிருக்கும் போது என்னைப் பயங்காட்ட ஒரு துணிப்பையில் அச்சடிக்கப்பட்ட ஒரு மாயமிருகத்தைக் காட்டுவார்கள். அதனைப் பார்த்து பயந்து, கதறியழுத நாட்கள் உண்டு. ஆனால் கொஞ்சநாட்கள் போனது, நானும் வளர்ந்தேன். துணிப்பையில் அச்சடிக்கப்பட்டிருந்தது ஒரு படம் மாயமிருகமல்ல என்பதை உணர்ந்து பயமின்றி வாழ்ந்தேன்.

ஒரு குழந்தை தன் உருவ பிம்பத்தை கண்ணாடியில் பார்த்து குழம்பிப் போகலாம். முதன்முறையாகப் பார்க்கும்போது அதிர்ச்சி கூட அடையலாம். ஆனால் சீக்கிரமே தன்னைப்போல் தோன்றினாலும் தன் பிம்பம் கண்ணாடியைத் தாண்டி வெளிவர முடியாது. தான் வேறு தன் பிம்பம் வேறு. தான் உயிர்; தன்னைப் போல் கண்ணாடியில் காட்சியளிக்கும் பிம்பம் வெற்றுக்காட்சி தவிர வேறு இல்லை என்பதை சில நாளில் புரிந்து கொள்ளுகிறது. நாம் எப்படியிருக்கிறோம்?

வாழ்க்கையில் பல நேரங்களில் நாம் காணும் காட்சிகள் எல்லாம் உண்மையல்ல, வெறும் பிம்பம் மட்டும்தான் என்பது மிக முக்கியமான வாழ்க்கை பாடம். கண்ணால் கண்டதையெல்லாம் உண்மையென்றெண்ணி “பொய்யான மாயையைப் பற்றி” வீழ்ந்து போக நம் சந்ததியை அனுமதிக்கலாமா? நம் இளம் தலைமுறைக்குக் கற்றுக்கொடுப்போம், பிம்பங்கள் உண்மையான உயிர்கள் அல்லவென்று. நாமும் கற்று பயமின்றி வாழ்வோம்.

- APJ

புதிய சுகாதாரத்துறை அமைச்சர்

காடாங்குளம் காட்டுக்குள்ளே அன்னைக்கு எல்லோரும் பரபரப்பா வேலை செஞ்சிட்டிருந்தாங்க. எல்லா முகத்திலும் ஒரு மாதிரியான பயம் இருந்திச்சு. பானை வயிற்று யானையிலிருந்து மீசைக்காரப் பூனை வரைக்கும், நெட்டைக் கழுத்து ஒட்டகச்சிவிங்கி முதல் குட்டைக் கால் முள்ளம் பன்றி வரைக்கும் எல்லாரும் அவங்கவங்க வீடுகளிலே ஏதோ ஒரு வேலையைச் செஞ் சிட்டிருந்தாங்க.

வீட்டைக் கூட்டிப் பெருக்கறது, பொருட்களை அடுக்கி ஒழுங்குபடுத்தறது ஆடைகளைத் தொவைச்சு வக்கிறது. ஒட்டைக் குச்சியால் சிலந்திவலையை சுத்தம் பன்றது என ஆளாளுக்கு ஒவ்வொரு வேலையைச் செஞ்சிட்டிருந்தாங்க.

ஏன் தெரியுமா? காட்டு ராஜா அன்னைக்கு அவங்க வீடுகளை பரிசோதிக்க வர்றாரு. அவர் வந்து பார்க்கும் போது வீடு துடைத்து வைத்த கண்ணாடி போல் பளிச்சுனு இருக்கணும். நேர்த்தியாக இருக்க வேண்டும். வீடு அலங்கோலமாக இருந்தாலோ, குப்பைக் கூளங்கள் குவிஞ்சு கிடந்தாலோ பொருட்கள் மேலே தூசு படிஞ்சு அழுக்காக இருந்தாலோ... அவ்வளவுதான். காடாங்குளம் காட்டை விட்டே விரட்டி விடுவாரு.

அந்த பயத்தாலே எல்லாரும் மும்முரமாக வேலை செஞ் சிட்டிருந்தாங்க ஒரே ஒராளத்தவிர அது யார் தெரியுமா? நம்ம குட்டி முயல்...

அது கொஞ்சம் கூட பயமில்லாமல் பச்சைப் புல் மைதானத்தில் தாவித்தாவி விளையாடிட்டிருந்தது. பச்சை பட்டு விரிச்சதுமாதிரி இருந்த அந்த மைதானத்தில் தனியா சந்தோஷமா விளையாடிட்டிருந்தது. உருண்டது புரண்டது... பச்சைப் புல்லைக் கடிச்சுக் கடிச்சு திண்ணுச்சு... சிங்கராஜா பரிசோதனைக்கு வருவதே தெரியாதது மாதிரி இருந்தது.

“இதென்ன, இந்த குட்டி முயல் காடாங்குளம் காட்டை விட்டே ஓடிடலாம்னு முடிவு செஞ்சிருச்சா? எல்லோருக்கும் ஒரே ஆச்சிரியம். எல்லா விலங்குகளும் கொஞ்ச நேரம் வேலையை நிறுத்திட்டு குட்டிமுயலுகிட்ட வந்துச்சு” ஒனக்கென்ன பைத்தியமா? இன்னைக்கு நம்ம ராஜா பரிசோதனைக்கு வர்றது தெரியாதா? நாங்கள் எல்லாம் வேர்க்க விறுவிறுக்க வேலை செஞ்சிட்டிருக்கிறோம். நீ பச்சைப்புல்லில் துள்ளித்துள்ளி விளையாட்டிருக்கியே? ஒடம்பெல்லாம் பொசு பொசுண்ணு முடியிருக்கற கரடி கேட்டது.

குட்டி முயல் விளையாட்டை நிறுத்திட்டு எல்லாரையும் அமைதியாகப் பாத்திச்சு, மெதுவாகச் சிரிச்சிது. அப்புறம் பேசத் தொடங்கிச்சு. சிங்க ராஜா பரிசோதனைக்கு வரட்டுமே. அதற்கு நான் ஏன் பயப்படணும்?

நான்தான் என் வீட்டை எல்லா நாளும் சுத்தமா வச்சிக்கிறேன்! நீங்க எல்லோரும் எல்லா நாளும் சும்மா இருந்துட்டு இப்ப வேலை செய்றீங்க. பரீச்சை வரும் போது அவசர அவசரமாகப் படிக்கறவங்களை மாதிரித்தான் நீங்க எல்லாரும். ஆனா நான் அப்படியல்ல.

அன்னன்னைக்குள்ள பாடங்களை அன்னன்னைக்கே படிக்கறவங்களை மாதிரி குட்டி முயல் சொன்னதக்கேட்டு எல்லாரும் வெட்கப்பட்டு தலையைக் குனிஞ்சுகிட்டாங்க.

காட்டு ராஜா பரிசோதனைக்கு வந்தாரு. எல்லாரோட வீடுகளையும் பரிசோதித்தாரு. அவசர அவசரமாக வேலை செஞ்சா சரியாக இருக்காதில்லயா? குட்டி முயலுக்குத்தான் முதல் பரிசு. பரிசு கொடுக்கும் போது காட்டுராஜா சிங்கம் என்ன சொல்ச்சு தெரியுமா. இனிமே நீ தான் இந்த காடாங்குளம் காட்டுக்கு மந்திரி அப்படீண்ணும் சொல்லிட்டாரு.

அன்னன்னைக்கு செய்ய வேண்டிய வேலைகளை தள்ளி வைக்காம அன்னன்னைக்கே செஞ்சுட்டா குட்டி முயல் மாதிரி நமக்கு முதல் பரிசு கிடைக்கும்.

2

ஒரு அழகான முட்டாள் இராஜா!

@ 2014 Bible for Children, Inc.







ஒரு அழகான முட்டாள் இராஜா!

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை
காணப்படுமிடம் 1 சாமுவேல் 8 – 16

"தேவனுடைய வார்த்தையை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது". சங்கீதம் 119:130

முற்றும்

நடப்பு செய்திகள்

உலகக் கோப்பை வாய்ப்பை இழந்த இத்தாலி

உலகக் கோப்பை போட்டிக்கு தகுதிப் பெறுவதற்கான போட்டியில், நான்கு முறை சாம்பியனான இத்தாலியும், ஸ்வீடன் அணிகளும் மோதினதில் முதல் ஆட்டத்தில் ஸ்வீடன் 10 என்ற கோல் கணக்கில் வென்றிருந்தது. நேற்று நடந்த ஆட்டத்தில் அதிக கோல் வித்தியாசத்தில் வென்றால், உலகக் கோப்பைக்கு தகுதி பெறலாம் என்ற நிலையில் இத்தாலி களமிறங்கியது.

இத்தாலியின் மிலன் நகரில் நடந்த இந்த போட்டியைப் பார்க்க, 76 ஆயிரம் மக்கள் குவிந்திருந்தனர். மற்றவர்கள் டிவியின் முன் உட்கார்ந்திருந்தனர். பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தில், இரு அணிகளும் கோலடிக்கவில்லை. போட்டி டிராவில் முடிந்தது. முதல் ஆட்டத்தில் வென்றதால், ஸ்வீடன் உலகக் கோப்பை போட்டிக்கு 30வது அணியாக தகுதிபெற்றது.

டிரம்ப்பின் சுற்றுச்சுவர் திட்டம் நாசம்



நியூயார்க்: டொனால்ட் டிரம்ப் அமெரிக்க எல்லையில் சுவர் எழுப்புவதற்காக வைத்திருந்த நிலத்தை தனியார் நிறுவனம் ஒன்று வாங்கி இருக்கிறது. அமெரிக்க மெக்சிகோ எல்லையில் இருக்கும் முக்கால்வாசி இடங்களை அந்த நிறுவனம் வாங்கிவிட்டது. எல்லையில் சுவர் கட்டுவதை தடுப்பதற்காக அந்த நிறுவனம் இந்த செயலில் இறங்கி இருப்பதாக கூறுகிறது. இதற்காக அந்த நிறுவனம் பெரிய திட்டங்களை வகுத்து இருக்கிறது.

கார்ட்ஸ் அகெய்ன்ஸ்ட் ஹுமானிட்டி என்ற அந்த நிறுவனம் இந்த அறிவிப்பால் ஒரே நாளில் அமெரிக்க முழுக்க பேமஸ் ஆகி இருக்கிறது. பலர் இந்த நிறுவனத்தை பாராட்டினாலும் சிலர் இது மலிவான விளம்பரம் என்றும் கூறியுள்ளனர்.

கடலைமிட்டாய், கருவாடுக்கு ஜிஎஸ்டி வரி இல்லை

டெல்லி: தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று கடலை மிட்டாய், கல்கண்டு, கருவாடு உள்ளிட்ட 10 பொருட்களுக்கு ஜிஎஸ்டியில் இருந்து முற்றிலும் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஆடம்பர பொருட்கள் என்று கருதப்படும் 50 பொருட்கள் மட்டுமே 28% ஜிஎஸ்டி வரி விகிதத்திற்குள் கொண்டுவரப்படும் என நிதியமைச்சர் அறிவித்துள்ளார்.

உயிருக்கு தீங்கு விளைவிக்க கூடிய சுமார் 50 பொருட்கள் அதிகபட்சமாக 28 சதவீத வரி விதிப்பு பட்டியலில் இடம் பெற்றுள்ளன. இதன்படி, பான் மசாலா, காற்றடைக்கப்பட்ட நீர் மற்றும் பானங்கள், சுருட்டு மற்றும் சிகரெட்டுகள், புகையிலை பொருட்களுக்கு 28% ஜிஎஸ்டி வரி விதிக்கப்பட்டுள்ளது.

காணிக்கை அனுப்ப

CHEQUE / DD: CSITA Tirunelveli Diocese

For Online Transfer:

Bank: Bank of India SB A/c No: 827020110000283
IFSCode: BKID0008270

குறிப்பு: Online & M.O. முலமாக காணிக்கை அனுப்புபவர்கள் உங்கள் மொபைல் எண் அல்லது இ-மெயில் தெரிவித்தால் ரசீது அனுப்ப உதவியாயிருக்கும்.

உள்நாடு	:	ஆண்டு சந்தா : ரூ.100/-	ஆயுள் சந்தா : ரூ.1500/-
வெளிநாடு	:	ஆண்டு சந்தா : $50	ஆயுள் சந்தா : $500

Tirunelveli Diocesan Children's Mission,
16-B, North Highground Road,
CSI Bishopstowe Campus,
Palayamkottai-627 002, Tamilnadu.
Email: baliarnesan@gmail.com
TDCM Helpline: 8489857572
www.baliarnesan.com

ஆசிரியர்: அருட்திரு. A.பாக்யராஜ்
இணை ஆசிரியர் : திருமதி. ஜூனிதா டேவிட்சன்
இதழ் வடிவமைப்பு : sunshine

R.N.I. No.: 1278/1957 Regn. No.: TVL/030/2015-2017. Date of Publication: 20.11.2017
Posted at: Head Post Office, Palayamkottai on the 22nd of every month.

OUR NEW LIFE MEMBERS

A9297 R.Reena Bernish

A9378 G.Ashley Rija

A9384 A.Agnes

A9377 G.Adeline Lizzy

A9442 Jerslyn Sharon

A9385 A.G.Ancy Paulin

A9506 M.Pershiya Naraoj

A9507 A.Jeba Sofia

A8816 Hans Davion

A9511 P.Jemson Samuel

E2620 John Jebarson

A9387 Joel

A9509 P.Thanga Thanisha

A9394 Vennila

A9441 S.Jenifer Angel

A9510 P.Selva Punisha

Published by: Rev. A. Packiaraj, Tirunelveli Diocesan Children's Mission.
Printed at: Tirunelveli Diocesan Offset Press, Palayamkottai.